ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2116/47 - 2019 මාර්තු මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.03.28
2116/47 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 15/2014* (II)

**2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டம்**

*2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 53 (2) மற்றும் 54 (1) (அ) என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 58 ஆம் பிரிவின்கீழ் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

சஜித் பிரேமதாச,
வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும்
கலாசார அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு.
*2019, மாச்சு 06.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2019 ஆம் ஆண்டின் நிர்மாணத்தொழில் அபிவிருத்தி (மேன்முறையீட்டு நடவடிக்கைமுறை) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) (இதனகத்துப்பின்னர் ''அதிகாரசபை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் ஏதேனும் முடிபினால் இன்னலுறும் எவரேனுமாள் சட்டத்தின் 53 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டுச் சபைக்கு அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

1 A - PG 4456 - 507 (2019/ 03)
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(2) உப ஒழுங்குவிதி (1) இன் கீழான மேன்முறையீடு ஒவ்வொன்றும் எழுத்திலிருத்தலும் பொருளளவில் இதற்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலிருத்தலும் வேண்டுமென்பதுடன் இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவொரு கட்டணத்துடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

3. இரண்டாம் ஒழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (1) இன்கீழான ஒவ்வொரு மேன்முறையீடும் பின்வரும் ஆவணங்களுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும் : -

(அ) அதிகாரசபையின் முடிபினது சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று;

(ஆ) (i) மேன்முறையீட்டாளரின் தேசிய ஆள் அடையாள அட்டையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று; அல்லது

(ii) ஒரு கம்பனியாக அல்லது பங்காண்மையாக அல்லது தனியுரிமையாளராகப் பதிவு செய்யப்பட்டமைக்கான பதிவுச்சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று;

(இ) (ஒரு நிர்மாண ஒப்பந்தக்காரரின் விடயத்தில்) நிர்மாண ஒப்பந்தக்காரரொருவராக அதிகார சபையுடனான பதிவுச்சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று;

(ஈ) நிர்மாணத்தொழிலில் வேறெவரேனும் அக்கறைகொண்டுள்ளவராக அதிகார சபையுடனான பதிவுச்சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று;

(உ) மேன்முறையீட்டில் சான்றாகப் பயன்படுத்தப்படக்கூடிய ஆவணங்களின் நிரலும் அத்தகைய எல்லா ஆவணங்களினதும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளும்; அத்துடன்

(ஊ) மேன்முறையீட்டுக்கான கட்டணங்களின் கொடுப்பனவுக்கான எண்பிப்பாகவுள்ள பற்றுச்சீட்டின் பிரதியொன்று.

4. மேன்முறையீடொன்றைச் செய்கின்ற ஆள் ஒவ்வொருவரும், அதிகாரசபையின் முடிபுபற்றிய அதிருப்திக்கான காரணங்களையும் நாடப்பட்ட நிவர்த்தியையும் திட்டவட்டமாகக் குறித்துக்காட்டுகின்றதாக அதனோடிணைக்கப்பட்டதும் மேன்முறையீட்டாளரினால் கையொப்பமிடப்பட்டதுமான கூற்றொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

5. மேன்முறையீடொன்றைச் செய்கின்ற ஆள் ஒவ்வொருவரும், அதிகாரசபையின் முடிபுத்தேதியிலிருந்து முப்பது நாட்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள் மேன்முறையீட்டுச் சபையின் செயலாளருக்கு அத்தகைய மேன்முறையீட்டை முப்பிரதிகளில் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

6. ஒவ்வொரு மேன்முறையீடும் அத்தகைய பெறுகைத் திகதியிலிருந்து ஏழு வேலைநாட்களைக் கொண்டவொரு காலப்பகுதியினுள் மேன்முறையீட்டுச் சபையின் செயலாளரினால் எழுத்தில் ஒப்புக்கொள்ளப்படுதல் வேண்டும்.

## முதலாம் அட்டவணை

### **மேன்முறையீட்டுப் படிவம்**

(ஒழுங்குவிதி 2 (2))

மேன்முறையீட்டாளரின் விபரங்கள் :

1. மேன்முறையீட்டாளர் ஓர் சாதாரண ஆளா அல்லது ஒரு சட்ட ஆளா என்பது :
..........................................................................................................................................................................
ஓர் சாதாரண ஆளாகவிருப்பின் :

i. முழுப் பெயர் : ..........................................................................................................................................
ii. நிரந்தர முகவரி : .......................................................................................................................................
iii. தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) : ........................................... (செல்லிடத் தொலைபேசி) : ..........................................
iv. மின்னஞ்சல் முகவரி (ஏதேனுமிருப்பின்) : ..........................................................................................................
v. தே. அ. அ. இலக்கம் : ...................................................................................................................................

ஒரு சட்ட ஆளாகவிருப்பின் :

i. ஒழுங்கமைப்பின் பெயர் : ..........................................................

ii. சட்ட ஆளுமையின் தன்மை (தனியுரிமையாளர்/பங்காண்மை/வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனி) :
..........................................................

iii. பதிவு செய்யப்பட்ட முகவரி : ..........................................................

iv. பதிவிலக்கம் : ..........................................................

v. தொலைபேசி இலக்கம் : ..........................................................

2. எந்தப் பதவியில் மேன்முறையீடு செய்யப்படுகின்றது (உள்நாட்டு ஒப்பந்தக்காரர்/வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்/ஆதன அபிவிருத்தியாளர்/நிர்மாணப்பொருள் வழங்குநர்/கனரக நிர்மாண எந்திரத்தொகுதியின் சொந்தக்காரர்/கைவினைஞர்/நிர்மாண வேலையாளர்/உள்நாட்டு ஆலோசகர் (தகைமைபெற்ற ஆள்)/வெளிநாட்டு ஆலோசகர்/தர முகாமைத்துவக் கணக்காய்வாளர்/தீர்ப்பாளர்) :
..........................................................

3. நி. தொ. அ. அ. பதிவிலக்கம் (ஏற்புடையற்பாலதாயின்) : ..........................................................

மேன்முறையீட்டின் விடயப்பொருளினது விபரங்கள் :

1. இன்னலின்/அதிருப்தியின் தன்மை (சுருக்கமாக) : ..........................................................
..........................................................
(இன்னலை விபரிக்கின்ற ஏறத்தாள ஒரு பக்கத்திலான முழுமையான அறிக்கையொன்றை இணைக்கவும்.)

2. இன்னல்/அதிருப்தி/அதற்கெதிராக மேன்முறையீடு செய்யப்பட்ட அதிகாரசபையின் முடிபு எழுந்த திகதி :
..........................................................

3. எந்தக் கருமம் தொடர்பில் மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்தக் கருமத்தில் சம்பந்தப்பட்டுள்ள வேறு ஆட்களும் அவர்களின் பதவியும் :
..........................................................

4. செலுத்தப்பட்ட கொடுப்பனவு ரூபா : .......................... கொடுப்பனவுத் திகதி : ..........................

5. இணைக்கப்பட்ட ஆவணங்களின் நிரல் : ..........................................................
..........................................................

மேன்முறையீட்டாளரின் கையொப்பம் : .......................... திகதி : ..........................
இலச்சினை :

இரண்டாம் அட்டவணை

**மேன்முறையீட்டுச் சபைக்கு மேன்முறையீடொன்றைச் செய்வதற்குத் தேவைப்பட்ட கட்டணம்**

(*ஒழுங்குவிதி 2 (2)*)

| மேன்முறையீட்டின் தன்மை | கட்டணம் (ரூபா) |
|---|---|
| ஓர் உள்நாட்டு நிர்மாண ஒப்பந்தக்காரரினாலான அல்லது வெளிநாட்டு ஒப்பந்தக்காரரினாலான மேன்முறையீடு | நி. தொ. அ. அதிகாரசபையின் முறையான பதிவுக் கட்டணங்களின் 10% |
| ஆதன அபிவிருத்தியாளர், நிர்மாணப்பொருள் வழங்குநர், கனரக நிர்மாண எந்திரத்தொகுதியின் சொந்தக்காரர், கைவினைஞர், நிர்மாண வேலையாளர், உள்நாட்டு ஆலோசகர் (தகைமைபெற்ற ஆள்), வெளிநாட்டு ஆலோசகர், தர முகாமைத்துவக் கணக்காய்வாளர் அல்லது தீர்ப்பாளர் ஒருவரினாலான மேன்முறையீடு | நி. தொ. அ. அதிகாரசபையின் முறையான பதிவுக் கட்டணங்களின் 5% |

*3 - 1068/2*